உ

கணபதிதுணை.

தேவகோட்டையில்வசித்த
திருப்பெருந்துறை
அண்ணாமலைச்செட்டியாரவர்கள்
குமாரராகிய

வன்றொண்டரவர்கள்

தேகவியோகத்தைக்குறித்த

பாடல்கள்.

இவை
மதுரைச்சில்லா
காரைக்குடியையடுத்த முத்துப்பட்டணம்
ரா. ம. கு. ரா. ம.
இராமநாதச்செட்டியாரவர்கள்
குமாரரும்
ஷை வன்றொண்டரவர்கள்
மாணாக்கருளொருவருமாகிய

சொக்கலிங்கச்செட்டியாரால்

செய்து

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
சைவப்பிரகாசயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபாநுஸு தைமீ.

உ

கணபதி துணை.

காப்பு.

சாலறுபான் மூவர்குரு பூசைமடஞ் சாரும்
மூலவனு கூலமத யானையடி முன்னிச்
சீலமுற வந்திசெய்து தேவைநகர் வாழும்
வாலறிவி ஞேங்கியவன் றொண்டரைவந் திப்பேம்.

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகெலாம் பயந்த வொண்டொடி பாகத்
தொருவனே யுயிர்கண்மாட் டிரங்கி
நலனுலாம் வேதா கமமென வோது
நவையறு நூல்களை நல்கி
யலைவிலா திவற்றை யோர்ந்துள விதியை
யநுட்டித்து விலக்கினை யகற்றின்
மலவலி நீங்கி யெமதடி யுறலாம்
வாய்மையி தாமென வுரைத்தான். (க)

அத்துணைப் பனுவ லோர்ந்துள விதியை
யநுட்டித்த லல்லதை விலக்க
லுத்தம குணத்தி ளன்றவர்க் கல்லா
லுட்டெளி வின்றியே யுலையுஞ்
சித்தம துடையார்க் கெய்திடா தெனவே
திருவுளத் தடைத்தனன் றேரா
வித்தகை யோர்க டம்மையு மடிக்கீ
ழிருத்திட வேண்டுமென் றெண்ணு. (உ)

மானிடக் கரத்தெம் வள்ளலே மீட்டு
மன்னுசீர் நாவலூ ரரசை
யூனெடுத் துழலா துலகுயு மாற்று
லுதவின னென்றுல குரைப்ப
வான்சீர்த் தேவை நகரிடத் தண்ணு
மலேவணி கேசன்பா லவன்செய்
மானலி றவத்தா லவ்வுரைக் கிசைய
வன்றெண்டப் பெயர்கொடே வந்தாய். (௩)

வானிடத் தவருந் துதித்திட வந்தோய்
மண்ணவர் மனந்தெருண் டுய்வா
னிடத் தவனே பரமெனத் தேற்றி
யாகம கலேகளாற் சாதித்
தானெடுத் ததனுற் பெறுபய னரன்று
ளுறுதலே யாமெனு முண்மை
தானெடுத் தோதி யஃதுறு வாய்மை
நெறியையுந் தக்கவா பகர்ந்தும். (௪)

துளக்கநூற் பொருள்க ளவைகளு மெவர்க்குந்
துகளற வுள்ளத் திற்றென்ற
விளக்கியு மைய மாதிமுக் குணமும்
வீட்டியும் விரிதரு மருளா
லளப்பில கால முலகினீர் வம்மி
னரனடி யடைவிப்போ மென்றே
கிளத்தினே வலிய வையனின் கருணே
கிளக்கவு நாயினேற் கெளிதோ. (௫)

இத்தகை யதனை யுள்ளவா றுணர்ந்தோ
ரெந்தைநின் றிருவடி நீங்கா
மெய்த்திரு வடைந்தார் நாயினுங் கடையேன்
மேவிடா துலைந்தன னந்தோ
வுய்த்துணர் வுடையோய் முன்னநீ யாங்கொண்
டெற்றதோ ரிவ்வுட லுலகில்
வைத்திட லாறு திங்களுக் காகு
மற்றதன் மேலிது தரியா. (௬)

ஆதலி னதன்முன் வேண்டிய வெல்லா
மறைகுதிர் தருதுமென் றறையா
தோதினை யறுபான் மூன்றுமெய் யடியார்க்
குறுகுரு பூசைக ளென்று
மேதமொன் றின்றி நடைபெற வவைகட்
கியைவன புணர்வித்தா யெந்தாய்
பாதகன் யாவு முணர்ந்துநின் னடையாப்
பதிதனுய்ச் சேய்மையிற் கிடந்தேன். (௭)

அந்தந்தோ விவ்வா றெம்பொருட் டிரங்கி
யருளவு மவற்றையு மறந்து
நொந்தந்தோ வுலைவா னென்றலை விதியி
னேன்மையிங் கீர்த்திட றகைத்தேன்
பந்தந்தோய் கில்லா முனிவரர் போற்றும்
பசுபதிக் கினியவெம் மடிகே
ளந்தந்தோ வந்தோ நீமுன முரைத்த
மதியமு மாறுவந் தடுத்த. (௮)

இந்நிலத் துள்ளார் பின்னருந் தேறி
யியற்றுவ நன்மையே யியற்றி
மெய்ந்நெறி நின்றே நின்னடி யடைவான்
விழைந்துநீ யான்றவ ரெவர்க்கும்
புன்னெறி யடையா ரடைசிவ புரிக்கே
போகுது நாமெனப் புகன்று
முன்னுறு கருதான் வாவியங் களிற்று
முகத்தன்மாட் டனுக்கைபெற் றேகி. (௯)

மந்தரங் கயிலை பருப்பதங் காசி
மற்றுள பெரும்பதி யெல்லா
மந்தர நாட னென்றும்வீற் றிருக்கு
மாலவாய்க் கொப்பிலென் றருளி
யெந்தம ராகு மடியவ ரோடு
மேகியப் பதியிடைச் சோம
சுந்தர னோடு கயற்கணி பாதந்
தொழுதுல குய்ந்திடத் துதித்து. (௧௦)

இத்தகை நெறியோ டாங்கிருந் தடைந்தார்க்
கெளிதுறு வரும்பெறற் கல்வி
மெய்த்தகைப் பொருள்கள் வெளிப்படக் கூறி
வேங்கடா சலவணி கேசற்
கத்திரு முருகாற் றுப்படைப் பொருளை
யரிறப வெளிதருள் செய்து
சித்திர பானு வருடத்தி லானித்
திங்களிற் சோடச தினத்தில். (௧௧)

புந்தியோன் வாரந் துவாதசி திதியும்
புனிதமா மனுடநன் னாளும்
வந்துறு கடக லக்கின மாகு
மங்கலங் கூடுறு பொழுதிற்
பந்தம தகற்றி வீடருள் சுவண
பங்கய வாவிநன் னீரிற்
றந்திர விதியா சாரத்தி லொன்றுந்
தாழ்வுறு தன்பொடு மூழ்கி. (கஉ)

பூதியு மணிந்து கண்டிகை பூண்டு
புனிதவைந் தக்கரம் புகன்று
கோதிலா மயத்தாற் றிருமெழுக் கிட்டுக்
குளிர்புனல் வைகைவா லுகத்தை
மீதுறப் பரப்பி யதன்மிசைத் தருப்பை
வெள்ளிய தூசதன் மேலுந்
தீதற விரித்த சுத்ததா னத்திற்
றிசைவடக் குறவிருந் தெந்தாய். (கங)

ஆட்டுவா னடிக் காட்டுதல் போல
வண்ணனீ யுண்ணெகிழ்ந் துருகி
நீட்டுறு வேணிப் பகவன தடியே
நினைந்துநற் சமாதியி லிருந்து
தோட்டலர் நெருங்கி யெழிலுறத் திகழ்ந்த
தூயதாம் விமானமீ திவர்ந்து
யாட்டறு வளிதே னுகர்பொழி லுடுத்த
பதிசிவ புரியினை யடைந்தாய். (கச)

ஐயகோ கொடியேற் கார்துணை யெந்தா
யயர்ந்துனை யிழந்தல மந்தேன்
பொய்யனேன் கரத்தி னுறுமணி யிழந்த
பொறியிலாக் குருடனே போன்றேன்
கையனேன் யானே யன்றியா ரடிகேள்
களறிநின் றன்புளேன் போல
நைகின்றேன் சழக்கே யுண்மையன் புடையார்
நண்ணினர் நின்னடிக் கமலம். (௧௫)

எம்மையாண் டருள்வா னெழுந்தரு ளிறைவ
னேகினா னென்றிடு முரையாம்
வெம்மைசேர் விடந்தான் றலைமிசைக் கேறி
வீந்திடா துயிரினைத் தாங்கிப்
பொய்ம்மைசே ருடலோ டிருந்தன னென்றும்
புன்மைசேர் வன்னெஞ்சன் யானே
செம்மைசேர் நெறியான் சேருவ தெங்ஙன்
றேவைவாழ் வன்றொண்ட தேவே. (௧௬)

ஊழ்வினை வலியா னின்னடி யணுகா
துற்றிவ ணுலைந்தன னந்தோ
காழ்வினை மலநோய் யறவினி யேனுங்
கடைக்கணித் தருளனின் கடனாம்
பாழ்பட வாணாள் வீணிலே கழித்தேன்
பாவியேற் குன்னரு ளின்றே
லாழ்வது நரகா மையகோ வெந்தா
யவ்விடைப் புக்கிடா தருள்வாய். (௧௭)

சிறியர் தாம்புரிந்த தீமைகள் யாவுந்
    தீர்த்தரு டருவது பெரியோர்
நெறியதென் றுலகோ ருரைப்பரெக் கலையு
    நிகழ்த்திடு மாதலாற் கல்வி
யறிவிலாச் சிறியன் யானுமுன் னருளா
    லாகம கலையெலா மாய்ந்து
முறைபிற ழாதந் நெறியினின் றுய்வான்
    முன்னிடாய் கருணைமா முகிலே. (கஅ)

எந்தையெம் பெரும வருவிலார் போனீ
    யெளியனைக் கைவிடி னேயே
னுய்ந்திட லரிதால் வேறியா ருளரோ
    வுறுதுயர் நீக்கியாண் டருள்வா
ருந்திநீர்க் கங்கை வேணிசே ரண்ணற்
    குள்ளவா தனமருள் பெரியோய்
சிந்தையா குலந்தீர்த் தெனக்கருள் செய்யாய்
    தேவைவாழ் வன்றொண்ட தேவே. (க௯)

உறுபசி யில்லார்க் கருள்வதி னுள்ளார்க்
    கோதன மீதலே யுயர்வாந்
துறுபவப் பிணியே வெதுப்புற வடியேன்
    சோறுறு தலைதரப் பசித்தேன்
மறுவிலா ரகத்து ளிடையறு திருந்து
    மலவிரு ளிரித்திடு மணியே
சிறுவன துயிரே கருணையங் கடலே
    தேவைவாழ் வன்றொண்ட தேவே. (௨0)

வேறு.

மங்கலம் பொலிய யாஞ்செய்
மாதவப் பயனே போல
வெங்குலம் விளங்க வந்தோ
யிணையில்வன் றெண்ட தேவே
திங்களங் கண்ணி யோன்மாட்
டன்பருள் செய்யும் வள்ளா
லிங்குன தடியான் கூற
றிருவுளத் தடைத்தி யெந்தாய். (உக)

முற்றிற்று.